முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1441

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.09.2023**, சனிக்கிழமை

1. மாதர்ம ராஜனே அரங்கா
மக்களை காத்திடும் ஞான தேசிகா
பூதளமெங்கும் உன் சன்மார்க்க நெறி
புண்ணிய நெறியாக பரவ அருள் புரிகின்ற
2. அருள்புரிகின்ற அரங்கனே
எந்தன் அவதார ஞானியே
பொருள்பட உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 23 ம் நாள், 09.09.2023, சனிக்கிழமை)
புகலுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
3. இனிதே அரங்கன் உன் சக்தி
இவ்வுலகமெல்லாம் பரவும் வகையாக
கனிவேலவன் யான் துணைகொண்டு அருள
கருணைவேண்டி உன்வழிவருவோர்க்கு
4. வருவோர்க்கு உன் கரம்பட ஆசி பெற்று
உயர் தர்மம் செய்கின்ற மக்களுக்கு
துணிவுபட அரங்கன் உன் குரு அருளாக
தொடர்ந்து அதனோடு என் அருளாசியும்
5. ஆசியும் கூடி வரும் அன்பர்களெல்லாம்
அகிலத்தில் ஞானவான்களாக மாற்றம் பெறுவர்
மாற்றம் தந்து அரங்கன் உன் சக்தியாக
மக்கள் அனைவருக்கும் மரணம் வெல்லுகின்ற
6. வெல்லுகின்ற அழியாமை வரம் தன்னை
வேலவன் யான் உன் கரம்பட வரும் தீட்சையாக
விரைந்து அருள்புரிந்து ஆறுமுகன் யான்
யானும் அற்புதத்தை உலகில் நடத்துவேன்

7. அரங்கன் மார்க்கம் தழைத்து நாளும்
வரங்கள் பெருகி இந்த
வையகம் எல்லாம் நிரம்பி
வருங்காலம் ஞானஆட்சி தருகின்ற

8. தருகின்ற மகா பெருமாற்றத்தை
தரணியில் ஆறுமுகன் யான் உன்வழி
வரமாகத் தந்து வழிநடத்தி
வையகத்தைக் காத்து அரங்கன் உன் அவதார நோக்கத்தை பூர்த்தி செய்வேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–